செ.வெ.எண்:-57/2020 நாள்:22.04.2020

**திண்டுக்கல் மாவட்டம்**

**பதிவு செய்யப்பட்ட மீனவர் நலவாரிய உறுப்பினர்கள் கொரோனா சிறப்பு நிவாரண உதவித்தொகை ரூ.1000/- கிடைக்கப்பெறவில்லை எனில் தங்களுடைய மீனவர் நலவாரிய அடையாள அட்டை, ஆதார் அடையாள அட்டை மற்றும் வங்கி கணக்கு விபரங்களை திண்டுக்கல் மாவட்ட மீன்வள உதவி இயக்குநர் அலுலகத்தில் தெரிவித்து பயன்பெறலாம் - மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி மு.விஜயலட்சுமி, இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

---

கொரோனா வைரஸ் தொற்றுநோய் பரவலை கட்டுப்படுத்தும் நிமித்தமாக தமிழ்நாடு அரசால் ஊரடங்கு அமல்படுத்தப்பட்டுள்ளதால், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டபடி, தமிழ்நாடு மீன்வளத்துறை மூலம் மீனவர் நலவாரிய உறுப்பினர்களுக்கு ஊரடங்கு காலத்தில் ரூ.1000/-வீதம் சிறப்பு நிவாரண உதவித் தொகை வழங்க ஆணை பிறப்பிக்கப்பட்டு பயனாளிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

திண்டுக்கல் மாவட்ட மீன்வள உதவி இயக்குநர் கட்டுப்பாட்டில் பதிவு செய்யப்பட்ட மீனவர் நலவாரிய உறுப்பினர்கள், தங்கள் வங்கிக் கணக்கில் மீனவர் நலவாரியம் மூலம் ரூ.1000/- சிறப்பு நிவாரண உதவித் தொகை கிடைக்கப்பெறவில்லை எனில் திண்டுக்கல் 80 அடி ரோட்டில் பி4/63, நேருஜி நகர் என்ற முகவரியில் செயல்பட்டு வரும் திண்டுக்கல் மாவட்ட மீன்வள உதவி இயக்குநர் அலுலகத்தில் மீன்வள உதவி இயக்குநரை தொடர்பு கொண்டு தங்களுடைய மீனவர் நலவாரிய அடையாள அட்டை, ஆதார் அடையாள அட்டை மற்றும் வங்கி கணக்கு விபரங்களை தெரிவித்து, சிறப்பு நிவாரண உதவித் தொகையினை பெற்றுக் கொள்ளலாம்.

மேலும் விபரங்களுக்கு 0451-2900148 என்ற தொலைபேசி எண்ணிலோ அல்லது 7598236815, 9750430221 ஆகிய கைப்பேசி எண்களில் அலுவலர்களை தொடர்புகொண்டு தெரிந்துகொள்ளலாம் என திண்டுக்கல் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி மு.விஜயலட்சுமி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திண்டுக்கல்.**

---